# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | சித்திரம் II<br>Art II | நேரம் :-<br>2 மணித்தியாலம் |
| சுட்டெண்:.................................... | 43 T II | |

**மிக முக்கியம்::-**

- ❖ விடைத்தாள் பின்பக்கத்தில் இடதுபக்க மேல் மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- ❖ பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலர்ந்திருக்க வேண்டும்.
- ❖ பஸ்ரல்வர்ணம், நீர்வர்ணம் போன்ற பொருத்தமான ஊடகம் பயன்படுத்தலாம்.

**<u>சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்</u>**

- ➢ உங்களுக்கு முன்னாலுள்ள பொருள்களை அவதானிக்குக.
  1. பருமட்டான தாளைப் பயன்படுத்தி பூர்வாங்க பரும்படிப்படத்தை வரைக.
  2. நீங்கள் காணும் விதத்தில் பொருள்களை வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்கு வெள்ளை வரைதற் தாளைப் பயன்படுத்துக.
- ➢ இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைக்குக.
- ➢ உங்கள் வரைதலை மதப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்க.

- ○ **சுயாதீன ரேகை கற்கை** :-
  1. பரும்படியான தாளிலுள்ள பூர்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் உங்கள் திறன் (5புள்ளிகள்)
- ○ **வர்ணச் சித்திரம்** :-
  2. தளத்துக்கு உகந்ததாக கலைநுட்பத்துடன் பொருட்கள் தொகுக்கப்பட்டிருத்தல் (5புள்ளிகள்)
  3. அளவிடைகள் , தூரநோக்கு , முப்பரிமாண விளைவு பற்றிய உமது விளக்கம் (5புள்ளிகள்)
  4. தரப்பட்டுள்ள பொருள்களின் பண்புகளை எடுத்துக் காட்டல் (5புள்ளிகள்)
  5. வர்ண ஊடகங்களை கையாளும் திறன் (5புள்ளிகள்)
  6. ஒட்டு மொத்த நேர்த்தியும் பொருத்தமான பின்னணியும் (5புள்ளிகள்)

(30புள்ளிகள்)

**மிகமுக்கியம்** :

பொருள்களின் தொகுதியை வைத்துள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருள்களின் தொகுதிக்குப் பொருந்தும் முறையில் சீராக மாற்றி வரைவதற்கு உங்களிற்கு சுதந்திரம் உண்டு.

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2022

| தரம் :- 10 | சித்திரம் III<br>Art III | நேரம் :-<br>2 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:................................... | 43 T III | |


**மிக முக்கியம்::-**

- ❖ விடைத்தாள் பின்பக்கத்தில் இடதுபக்க மேல் மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- ❖ பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலர்ந்திருக்க வேண்டும்.
- ❖ பஸ்ரல்வர்ணம், நீர்வர்ணம் போன்ற பொருத்தமான ஊடகம் பயன்படுத்தலாம்.

**“அ” பகுதி அல்லது “ஆ” பகுதி அல்லது “இ” பகுதியில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுக..**

### பகுதி “அ”- கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்

1. சமயக் கிரியை ஒன்றில் ஈடுபட்டுள்ள பக்தர்கள்
2. வயலில் வேலை முடிந்து இளைப்பாறும் விவசாயிகள்.
3. கிராமிய விளையாட்டொன்றின் உள்ளங் கவர்ந்த சந்தர்ப்பமொன்று.
4. சுதந்திரமாகத் திரியும் காட்டு மிருகங்கள்

### பகுதி “ஆ”- அலங்காரச்சித்திரம்

5. விலங்குருவங்களைப் பயன்படுத்தி சாரம் ஒன்றின் கரைக்கான அலங்காரம்
6. சதுர வடிவான தழுவணை உறை (குஷன் கவர்) ஒன்றிற்கான முழுத்தள அலங்காரமொன்றை மரபுரீதியான அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி 8’’ x 8’’ அங்குல அளவில் நிர்மாணிக்குக.
7. அரூப ரீதியான அலங்கார அலகுகளைப் பயன்படுத்தி 12’’ x 8’’ அங்குல அளவுடைய திரைச்சீலை ஒன்றினை வடிவமைக்குக. (கடதாசியின் பரிமாணத்துக்கு ஏற்றவாறு திட்டமிடுக.)

### பகுதி “இ”- கிரபிக்சித்திரம்

8. சிறுவர்களுக்கான நூல் ஒன்றிற்கான முகப்பு அட்டை ஒன்றினை (முதற்பக்கத்தை மாத்திரம்) பொருத்தமாக நிர்மாணிக்குக.
9. ‘‘சுத்தமான சூழல் நம் அனைவரையும் பாதுகாக்கும்’’ என்னும் தலைப்பில் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தையும், டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வெளிக்காட்டும் சுவரொட்டி ஒன்றினை வடிவமைக்குக.
10. புதியதாக தயாரிக்கப்படும் சம்பூ(sampoo) போத்தல் ஒன்றிற்கான மேலுறையினை கவர்ச்சிகரமாக அமைக்குக. (30 புள்ளிகள்)